ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2298/51 - 2022 සැප්තැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.09.22

*2298/51 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

*பிரிவு 2 மற்றும் 5 இன் கீழான கட்டளை*

*1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம், இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டம் தொடர்பாக அதற்கு நேரொத்த பதிவிலே அவ்வட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை 2022, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி முதல் ஆரம்பமாகி 03 மாத காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாகுமாறு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக விதிக்கின்றேன்.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| | இ.மு. தலைப்பு | இ.மு. குறியீடு | விவரணம் | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| 1 | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | கி.கி. ஒன்றிற்கு 50 ரூபா |

1A - PG 5980 — 481 (2022/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. வர்த்தக நோக்கம் தவிர்ந்த மருந்துகளை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுசெய்துள்ள எந்தவொரு மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களாலும், சுகாதாரம் தொடர்பான விடயத்திற்குரிய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இறக்குமதி செய்யப்படும் 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 2292/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இ. மு. குறியீடு 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள உப்பின் (சோடியம் குளோரைட்டு வீ. பீ.) மீது பிரயோகிக்கப்படக்கூடிய விசேட வியாபார பண்ட அறவீடான கி. கி. ஒன்றிற்கு 40 ரூபாவில் இருந்து கி. கி. ஒன்றிற்கு 10 ரூபாவினை அறவிட்ட பின்பு, மிகுதித் தொகையினை விலக்களிக்குமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன். இந்தக் கட்டளையானது, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வரை செல்லுபடியாகும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, செத்தெம்பர் 22.

EOG 09-0248

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.